# பெட்ரோல், டீசல் விலை மீண்டும் உயர்வு

## 9 நாள்களில் லிட்டருக்கு ரூ.5 அதிகரிப்பு

புது தில்லி, மே 23: பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை தொடர்ந்து மூன்றாவது முறையாக சனிக்கிழமை உயர்த்தப்பட்டது. பெட்ரோல் லிட்டருக்கு 87 காசு வீதமும், டீசல் லிட்டருக்கு 91 காசு வீதமும் உயர்த்தப்பட்டது.

இதன்படி, கடந்த 9 நாள்களில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ஒட்டுமொத்தமாக ரூ. 5 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதுபோல, வாகனங்களுக்கான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (சிஎன்ஜி) விலை கிலோவுக்கு ரூ. 1 வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 9 நாள்களில் இதன் விலை ஒட்டுமொத்தமாக கிலோவுக்கு ரூ. 4 உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்காசிய போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

9 நாள்களில் மூன்றாவது முறை பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை எண்ணெய் நிறுவனங்கள் கடந்த 15-ஆம் தேதி லிட்டருக்கு தலா ரூ. 3 அளவுக்கு உயர்த்தின. வாகனங்களுக்கான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (சிஎன்ஜி) விலை கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டது.

தொடர்ந்து, வாகனங்களுக்கான சிஎன்ஜி விலை இரண்டாவது முறையாக மே 17-ஆம் தேதி கிலோவுக்கு ரூ.1 அதிகரிக்கப்பட்டது.

அதுபோல, கடந்த 19-ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலையும் லிட்டருக்கு தலா 90 காசு வீதம் இரண்டாவது முறையாக உயர்த்தப்பட்டது. தற்போது மூன்றாவது முறையாக சனிக்கிழமை உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு காரணமாக தலைநகர் தில்லியில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 98.64-லிருந்து ரூ. 99.51-ஆக உயர்ந்தது. டீசல் லிட்டர் விலை ரூ. 91.58-லிருந்து ரூ. 92.49-ஆக உயர்ந்தது. சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 104.51-லிருந்து ரூ. 105.31-ஆகவும், டீசல் ஒரு லிட்டர் ரூ. 96.13-லிருந்து ரூ. 96.98-ஆகவும் உயர்ந்தது.

உள்ளூர் வரி, மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்டவை காரணமாக பெட்ரோல்,



டீசல் சில்லறை விற்பனை விலை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும்.

முன்னதாக, கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரலில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. அதன் பிறகு மாற்றமின்றி விற்கப்பட்டு வந்த நிலையில், மக்களவைத் தேர்தலுக்கு சற்று முன்பாக கடந்த 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.2 வீதம் குறைக்கப்பட்டது. தற்போது அடுத்தடுத்து மூன்று முறை விலை உயர்த்தப்பட்டுள்ளது. மேற்காசிய பிரச்னைக்கு தீர்வு எட்டப்படாவிட்டால் விலை உயர்வு தொடரும் என்ற அச்சமும் நிலவுகிறது.

பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு இல்லை: மேற்காசிய போரின் எதிரொலியாக, ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருள்களை சிக்கனமாகப் பயன்படுத்தும்படி, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார். அதைத் தொடர்ந்து, பெட்ரோல்-டீசல் விலை அடுத்தடுத்து மூன்று முறை உயர்த்தப்பட்டது.

இந்தச் சூழலில், மகாராஷ்டிரத்தின் வாசிம், ஜல்கோன், சத்ரபதி சம்பாஜி நகர், அகோலா, பீட், புல்தானா, பர்பானி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக வதந்தி பரவியது. இதனால் பீதியடைந்த மக்கள், பெட்ரோல்-டீசலை வாங்கி இருப்பு வைக்கும் நோக்குடன் பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்குப் படையெடுத்தனர். பெரிய கேன்களுடன் மக்கள் முண்டியடிக்கும் காட்சிகளும், நீண்ட வரிசையில் காத்திருக்கும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் வெளியாகின. இதுபோல, மேலும் சில மாநிலங்களிலும் வதந்திகள் பரவின.

இந்த நிலையில், நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) தெளிவுபடுத்தியுள்ளது. இதுதொடர்பாக ஐஓசி சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என்பதை நுகர்வோருக்கும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம். ஒருசில பெட்ரோல் நிலையங்களில் மட்டுமே இதுபோன்ற தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதுவும் தற்காலிகமான, அந்தப் பகுதி சார்ந்த தட்டுப்பாடாகும். ஒட்டுமொத்தமாக 42,000 பெட்ரோல் நிலையங்களில் மட்டுமே இதுபோன்ற தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் உள்ள மற்ற லட்சக்கணக்கான பெட்ரோல் நிலையங்களில் விநியோகம் சீராக உள்ளது.

தற்போதைய அறுவடைப் பருவம் போன்ற பருவம் சார்ந்த தேவை அதிகரிப்பு காரணமாகவே ஒருசில பெட்ரோல் நிலையங்களில் டீசல் தேவை அதிகரித்து, தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், விலை உயர்வு காரணமாக, தனியார் பெட்ரோல் நிலையங்களில் சில்லறை விற்பனை விலை ஒப்பீட்டளவில் சற்று கூடுதலாக இருப்பதால், வாடிக்கையாளர்கள் அதிக எண்ணிக்கையில் பொதுத் துறை நிறுவன பெட்ரோல் நிலையங்கள் நோக்கி வருவதும், இந்தத் தற்காலிக தட்டுப்பாட்டுக்கு காரணமாகும்.

மே 1-ஆம் தேதிமுதல் 22-ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் பெட்ரோல் விற்பனை முந்தைய ஆண்டைக் காட்டிலும் 14 சதவீதம் அளவுக்கு உயர்ந்தது. அதுபோல, டீசல் விற்பனை சுமார் 18 சதவீதம் அளவுக்கு அதிகரித்தது.

ஒட்டுமொத்தமாக, போதிய பெட்ரோல், டீசல் இருப்பை தொடர்ந்து பராமரிக்க அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்கள் தேவையான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. அதுபோல, குறிப்பிட்ட ஒருசில பகுதிகளில் ஏற்படும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஐஓசி சார்பிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, நாட்டில் பெட்ரோல், டீசல் தடையற்ற விநியோகத்தை உறுதிப்படுத்த ஐஓசி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்தது.

# இந்தியா–அமெரிக்கா நெருங்கிப் பணியாற்றும்

## மார்கோ ரூபியோவை சந்தித்த பின் பிரதமர் மோடி



தில்லியில் பிரதமர் மோடியை சனிக்கிழமை சந்தித்துப் பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ.

புது தில்லி, மே 23: உலக நலனுக்காக இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து நெருங்கிப் பணியாற்றும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகள், மேற்காசிய நிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து தில்லியில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோவுடன் சனிக்கிழமை நடத்திய விரிவான பேச்சுவார்த்தைக்குப் பிறகு பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியப் பொருள்கள் மீதான பரஸ்பர வரி விதிப்பு, ரஷிய கச்சா எண்ணெய் கொள்முதலைக் காரணம் காட்டி இந்தியா மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரி, ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் சர்ச்சைக்குரிய கருத்துகள் மற்றும் அவரது பல்வேறு செயல்பாடுகளால் கடந்த ஆண்டு மத்தியில் இருந்து இந்திய–அமெரிக்க உறவுகள் பின்னடைவுக்கு உள்ளாகின.

இருதரப்பு உறவுகளை மறுசீரமைக்க கடந்த சில மாதங்களாக பரஸ்பரம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நோக்கத்தின்கீழ், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ நான்கு நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு சனிக்கிழமை வந்தார். அவரது முதல் இந்திய அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

தில்லியில் அவர், பிரதமர் மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இந்தியா–அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான முழு அம்சங்கள் குறித்த பல சுற்று பேச்சுவார்த்தைகளுக்கு இடையே பிரதமர் மோடி - ரூபியோ சந்திப்பு நடைபெற்றுள்ளது. அத்துடன், மேற்காசிய போர் எதிரொலியாக ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டு, உலகளாவிய எரிபொருள் விநியோகம் தடைபட்டுள்ள பின்னணியில் இந்தச் சந்திப்பு கூடுதல் முக்கியத்துவம் பெற்றது.

நெருங்கிப் பணியாற்றுவோம்: பேச்சுவார்த்தைக்குப் பிறகு எக்ஸ் தளத்தில் பதிவிட்ட பிரதமர் மோடி, 'அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரை இந்தியாவுக்கு வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியா–அமெரிக்கா இடையிலான விரிவான உலகளாவிய உத்திசார் கூட்டுறவின் நிலையான முன்னேற்றம் குறித்தும், பிராந்திய–உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பு சார்ந்த விவகாரங்கள் குறித்தும் ஆலோசித்தோம். உலக நலனுக்காக இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து நெருங்கிப் பணியாற்றும்' என்று குறிப்பிட்டார்.

பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'பாதுகாப்பு, உத்திசார் தொழில்நுட்பங்கள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து பிரதமர் மோடியிடம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ எடுத்துரைத்தார். மேற்காசிய நிலவரம் உள்பட பல்வேறு பிராந்திய–உலகளாவிய விவகாரங்களில் அமெரிக்காவின் கண்ணோட்டத்தையும் பிரதமரிடம் ரூபியோ பகிர்ந்துகொண்டார்.

பேச்சுவார்த்தை மற்றும் ராஜீய வழிமுறைகளின் வாயிலாக போர்களுக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு மீண்டும் அழைப்பு விடுத்த பிரதமர் மோடி, அமைதி முயற்சிகளுக்கான இந்தியாவின் தொடர் ஆதரவை உறுதிப்படுத்தினார். அதிபர் டிரம்ப்புக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர், தொடர்ச்சியான கலந்துரையாடல்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கம்போடியா சைபர் அடிமை வழக்கு: மேலும் ஒருவர் கைது

சென்னை, மே 23: கம்போடியா சைபர் அடிமை வழக்கில், மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கம்போடியாவில் சைபர் அடிமை வேலை செய்த திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர், அண்மையில் அங்கிருந்து தப்பி வந்து, தமிழக சைபர் குற்றப் பிரிவில் புகார் செய்தார். அதன்பேரில், சைபர் குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தினர்.

திருப்பத்தூர் இளைஞர் கொடுத்த தகவலின் அடிப்படையில், தமிழக இளைஞர்களை ஏமாற்றி கம்போடியாவுக்கு அழைத்துச் சென்று சைபர் அடிமையாக்கும் மதுரையைச் சேர்ந்த மதன் வடிவேல் என்பவரை சைபர் குற்றப் பிரிவினர் கடந்த 10-ஆம் தேதி கைது செய்தனர்.

இதற்கிடையே இந்த வழக்கில் தொடர்புடைய ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா பகுதியைச் சேர்ந்த செ.செய்யது உசேன் (37) என்பவரைக் கைது செய்திருப்பதாக சைபர் குற்றப் பிரிவினர் தெரிவித்தனர்.

ரூ.1 லட்சம் கமிஷன்: செய்யது உசேனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த 2016 முதல் 2019-ஆம் ஆண்டு வரை துபை, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளில் வேலை செய்து வந்தபோது, அங்கு அவருக்கு சைபர் குற்றங்களில் ஈடுபடும் சர்வதேச சட்டவிரோத கும்பலின் தொடர்பு கிடைத்துள்ளது.

அந்த கும்பல் கேட்டுக்கொண்டதன்பேரில், தமிழகத்தில் இருந்து வெளிநாடு வேலைக்கு செல்வதற்கு ஆர்வமாக இருந்த பட்டதாரி இளைஞர்களை அதிக ஊதியத்துடன் கூடிய வேலைக்கு அனுப்புவதாக ஏமாற்றி, கம்போடியாவுக்கு செய்யது உசேன் அனுப்பியுள்ளார்.

இந்த இளைஞர்களை மலேசியா, பாங்காங்கு வழியாக செய்யது உசேன், கம்போடியாவுக்கு அனுப்பியுள்ளார். இதற்காக உசேன், ஒரு நபருக்கு ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சம் வரை கமிஷன் பெற்றுள்ளார்.

இரு வாரங்களுக்கு ஒருமுறை இவ்வாறு சைபர் அடிமை வேலைக்கு இளைஞர்களை ஏமாற்றி செய்யது உசேன் அனுப்பியுள்ளார்.

இளைஞர்கள் கம்போடியாவுக்கு சென்று சேர்ந்ததும், செய்யது உசேனுக்கு கமிஷன் தொகை ஆன்லைன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட செய்யது உசேனிடமிருந்து எண்ம ஆதாரங்கள், ஆன்லைன் பண பரிவர்த்தனை விவரங்கள், வாட்ஸ்ஆப் மூலம் பேசிய சர்வதேச அழைப்பு விவரங்கள் உள்ளிட்டவற்றைக் கைப்பற்றியிருப்பதாக சைபர் குற்றப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக போலீஸார், மேலும் சிலரைத் தேடி வருகின்றனர்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# கோயில்களில் ஊழலுக்கு எதிராக நுண் மேலாண்மை

## இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்



திருச்சி, மே 23: கோயில்களில் ஊழலுக்கு எதிராக நுண் மேலாண்மை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சி. ரமேஷ் தெரிவித்தார்.

திருச்சியில் சனிக்கிழமை பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர், அவர் மேலும் கூறியதாவது:

மதச் சார்பற்ற சமூக நீதிதான் தவெகவின் கொள்கை. ஜாதி வேற்றுமைகளைக் களைய வேண்டுமென்ற பெரியார், அம்பேத்கரை கொள்கைத் தலைவர்களாகக் கொண்ட கட்சியான தவெகவில் இணைந்து பணியாற்றிவரும் எங்களுக்கு ஜாதி, மதம், பணம், இனம், மொழி, பாலினம் என்ற எவ்விதப் பாகுபாடும் கிடையாது. அவற்றைப் பார்த்து தலைவர் ஜோசப் விஜய் எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

சேவை மனநிலையைப் பார்த்து தான் வாய்ப்புக் கொடுத்தார். எனவே, ஜாதியை வைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. மக்களுக்காகச் சேவை செய்கிறாரா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஜாதி பார்த்து அமைச்சர் பதவி ஒதுக்கப்படவில்லை. தலைவருக்கு பிரிவினை பார்க்கும் எண்ணமும் துளியும் கிடையாது.

துறை ரீதியான முதல்கட்ட ஆய்வை நடத்தி, கோயில்களுக்கு பக்தர்கள் மனநிறைவுடன் வந்து செல்லவும், கூட்ட நெரிசலைக் குறைக்கவும், நீண்ட நேரம் நிற்பதைக் குறைக்கவும், நேர மேலாண்மையைச் செயல்படுத்தவும், பல்வேறு விஷயங்களை ஆலோசித்துள்ளோம். அவற்றை விரைவில் முன்னெடுப்போம்.

இதேபோல, கோயில் நிலங்கள், சொத்துகள், ஆக்கிரமிப்புகள் என ஒவ்வொன்றாக ஆய்வு செய்து, உண்மையிலேயே மக்களுக்குப் பயன்படும் வகையில் நடவடிக்கை எடுப்போம்.

இந்து சமய அறநிலையத் துறையில் அனைத்து ஊழியர்களும் நேர்மையாகப் பணி செய்ய வேண்டும். ஊழலுக்கோ, அதிகார மையத்தை உருவாக்கவோ கோயில்களில் இடம் கிடையாது. இதை நுண் அளவில் மேலாண்மை செய்து, உரிய நடவடிக்கை எடுப்பேன்.

அனைத்து வகைகளிலும் அனைவரும் பாராட்டும் வகையில் அறநிலையத் துறை செயல்படும்.

ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் அடிமனைப் பிரச்னைகள் தொடர்பாக ஆராய்ந்து, மக்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டியதை கிடைக்கச் செய்வோம்.

கோயில்களின் கழிப்பறைகள், விடுதிகள், அன்னதானக் கூடம், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றவும், எளிதாக பக்தர்கள் தரிசனம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கால அவகாசம் வழங்கினால், அனைத்தையும் ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தவெக ஆட்சி இருக்கும் வரையிலும், ஆட்சிக்குப் பிறகும் எங்களது திட்டங்கள் பேசப்படும் என்றார் அமைச்சர் சி.ரமேஷ்.